# இலங்கையில் ஜனநாயகம் மற்றும் மீள்நல்லிணக்கம்



முதல்நிலை அறிக்கை

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் | சோஷல் இன்டிகேட்டர்

மார்ச் 2024

# உள்ளடக்கங்கள்


அறிமுகம் ..... 1

முறைமையியல் ..... 2

முடிவுகளின் சாராம்சம் ..... 3

ஜனநாயகம் தொடர்பிலான ஆதரவு ..... 3

நிறுவனங்கள் மீதான நம்பிக்கை ..... 3

மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம் ..... 3

அதிகாரப் பரவலாக்கம் ..... 3

மதச்சார்பற்ற அரசியலமைப்பு ..... 3

அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக அறிந்துவைத்துள்ளமை மற்றும் அபிப்பிராயங்கள் ..... 4

சிறுபான்மை- பெரும்பான்மையினருக்கு இடையிலான உறவுகள் ..... 4

சமூக நம்பிக்கை ..... 5

சிறுபான்மையினருக்கான அரசியல் பாதுகாப்பு ..... 5

தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி ..... 6

நினைவு கூறுவதற்கான சுதந்திரம் ..... 6

ஜனநாயகம் தொடர்பிலான ஆதரவு ..... 7

ஆய்வு முடிவுகள் ..... 7

வரைபு 01: ஜனநாயகத்திற்கான ஆதரவு - தேசிய ..... 8

வரைபு 02: ஜனநாயகத்திற்கான ஆதரவு - இனம் ..... 8

வரைபு 03: ஜனநாயகத்திற்கான ஆதரவு - பாலினம் மற்றும் வயது ..... 9

நிறுவனங்கள் மீதான நம்பிக்கை ..... 9

வரைபு 04: நிறுவனங்கள் மீதான நம்பிக்கை - தேசிய ..... 9

அட்டவணை 01: நிறுவனங்கள் மீதான நம்பிக்கை - இனம் ..... 10

மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம் ..... 10

வரைபு 05: மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம் குறித்த திருப்தி - தேசிய ..... 10

வரைபு 06: மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம் குறித்த திருப்தி - இனம் ..... 11

வரைபு 07: மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம் குறித்த திருப்தி - பாலினம் மற்றும் வயது ..... 11

அதிகாரப் பரவலாக்கம் ..... 12

வரைபு 08: மாகாண சபைக்கு அதிகாரம் பகிர்ந்தளிப்பது தொடர்பான ஆதரவு - தேசிய ..... 12

வரைபு 09: மாகாண சபைக்கு அதிகாரம் பகிர்ந்தளிப்பது தொடர்பான ஆதரவு - இனம் ..... 12

வரைபு 10: மாகாண சபைக்கு அதிகாரம் பகிர்ந்தளிப்பது தொடர்பான ஆதரவு - பாலினம் மற்றும் வயது ..... 13

மதச்சார்பற்ற அரசியலமைப்பு ..... 13

வரைபு 11: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் தொடர்பிலான ஆதரவு - தேசிய ..... 13

வரைபு 13: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் தொடர்பிலான ஆதரவு - பாலினம் மற்றும் வயது ....14
அரசியலமைப்பு சீரதிருத்தங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை மற்றும் அபிப்பிராயங்கள் ....15
வரைபு 14: அரசியலமைப்பு சீரதிருத்தங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - தேசிய ....15
வரைபு 15: அரசியலமைப்பு சீரதிருத்தங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - இனம் ....15
வரைபு 16: அரசியலமைப்பு சீரதிருத்தங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - பாலினம் மற்றும் வயது ....16
வரைபு 17: அரசியல் தீர்வு தொடர்பான அபிப்பிராயம் - தேசிய ....16
வரைபு 18: அரசியல் தீர்வு தொடர்பான அபிப்பிராயம் - இனம் ....17
வரைபு 19: அரசியல் தீர்வு தொடர்பான அபிப்பிராயம் - பாலினம் மற்றும் வயது ....17
வரைபு 20: அரசியலமைப்பு சீரதிருத்தங்களுக்கான ஆதரவு - தேசிய ....18
வரைபு 21: அரசியலமைப்பு சீரதிருத்தங்களுக்கான ஆதரவு - இனம் ....18
வரைபு 22: அரசியலமைப்பு சீரதிருத்தங்களுக்கான ஆதரவு - பாலினம் மற்றும் வயது ....19
சிறுபான்மை - பெரும்பான்மையினருக்கு இடையிலான உறவுகள ....19
வரைபு 23: “எனது இனம் காரணமாக மக்கள் என்னை அடிக்கடி வேறுபடுத்தி நடத்துகின்றார்கள்” - தேசிய ....19
வரைபு 24: “எனது இனம் காரணமாக மக்கள் என்னை அடிக்கடி வேறுபடுத்தி நடத்துகின்றார்கள்” - இனம் ....20
வரைபு 25: “எனது இனம் காரணமாக மக்கள் என்னை அடிக்கடி வேறுபடுத்தி நடத்துகின்றார்கள்” - பாலினம் மற்றும் வயது ....20
வரைபு 26: உங்கள் இனம் தவிர்ந்த வேறு இனத்தைச் சேர்ந்த எவருடனாவது நீங்கள் எந்தளவு அடிக்கடி (இடைச்செயற்பாடு) தொடர்பு கொள்கிறீர்கள்? – தேசிய ....21
வரைபு 27: உங்கள் இனம் தவிர்ந்த வேறு இனத்தைச் சேர்ந்த எவருடனாவது நீங்கள் எந்தளவு அடிக்கடி (இடைச்செயற்பாடு) தொடர்பு கொள்கிறீர்கள்? - இனம் ....21
வரைபு 28: உங்கள் இனம் தவிர்ந்த வேறு இனத்தைச் சேர்ந்த எவருடனாவது நீங்கள் எந்தளவு அடிக்கடி (இடைச்செயற்பாடு) தொடர்பு கொள்கிறீர்களா? - பாலினம் மற்றும் வயது ....22
வரைபு 29: இலங்கையிலுள்ள மற்றைய இனத்தவா்கள் தொடா்பாக நீங்கள் எவ்வளவு தூரம் தெரிந்து / அறிந்து வைத்துள்ளீா்கள்? - தேசிய ....22
வரைபு 30: இலங்கையிலுள்ள மற்றைய இனத்தவா்கள் தொடா்பாக நீங்கள் எவ்வளவு தூரம் தெரிந்து / அறிந்து வைத்துள்ளீா்கள்? - இனம் ....23
வரைபு 31: இலங்கையிலுள்ள மற்றைய இனத்தவா்கள் தொடா்பாக நீங்கள் எவ்வளவு தூரம் தெரிந்து / அறிந்து வைத்துள்ளீா்கள்? - பாலினம் மற்றும் வயது ....23
வரைபு 32: உங்களது சமூகத்தில் உங்களது சமயத்தினை கடைபிடிப்பதற்கு எந்தளவு சுதந்திரம் காணப்படுகின்றது என நீங்கள் நினைக்கிறீா்கள்? - தேசிய ....24
வரைபு 33: உங்களது சமூகத்தில் உங்களது சமயத்தினை கடைபிடிப்பதற்கு எந்தளவு சுதந்திரம் காணப்படுகின்றது என நீங்கள் நினைக்கிறீா்கள்? - இனம் ....24
வரைபு 34: உங்களது சமூகத்தில் உங்களது சமயத்தினை கடைபிடிப்பதற்கு எந்தளவு சுதந்திரம் காணப்படுகின்றது என நீங்கள் நினைக்கிறீா்கள்? - பாலினம் மற்றும் வயது ....25
வரைபு 35: உங்களது சமூகத்தில் உங்களது சமயத்தினை கடைபிடிப்பதற்கு எந்தளவு சுதந்திரம் காணப்படுகின்றது என நீங்கள் நினைக்கிறீா்கள்? - மதம் ....25
சமூக நம்பிக்கை ....26

வரைபு 36: உங்களுக்கு ஏதேனும் தனிப்பட்ட உதவி பெற வேண்டி இருப்பின், உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் நபர்களை நீங்கள் எந்த அளவிற்கு நம்புவீர்கள் என்று கூறமுடியுமா? - தேசிய ....26

வரைபு 37: உங்களுக்கு ஏதேனும் தனிப்பட்ட உதவி பெற வேண்டி இருப்பின், உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் நபர்களை நீங்கள் எந்த அளவிற்கு நம்புவீர்கள் என்று கூறமுடியுமா? - இனம் ....26

சிறுபான்மையினருக்கான அரசியல் பாதுகாப்பு ....27

வரைபு 38: ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளாத போதும், சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் - தேசிய ....27

வரைபு 39: ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளாத போதும், சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் - இனம் ....27

வரைபு 40: ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளாத போதும், சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் - பாலினம் மற்றும் வயது ....28

வரைபு 41: ஒவ்வொரு இனக் குழுவுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான உரிமை இருக்க வேண்டும் - தேசிய ....28

வரைபு 42: ஒவ்வொரு இனக் குழுவுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான உரிமை இருக்க வேண்டும் - இனம் ....29

வரைபு 43: ஒவ்வொரு இனக் குழுவுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான உரிமை இருக்க வேண்டும் - பாலினம் மற்றும் வயது ....29

வரைபு 44: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் - தேசிய ....30

வரைபு 45: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் - இனம் ....30

வரைபு 46: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் - பாலினம் மற்றும் வயது ....30

தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி ....31

வரைபு 47: தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மற்றும் தமிழ் மொழியில் பாடுவதற்கான ஆதரவு - தேசிய ....31

வரைபு 48: தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மற்றும் தமிழ் மொழியில் பாடுவதற்கான ஆதரவு - இனம் ....32

வரைபு 49: தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மற்றும் தமிழ் மொழியில் பாடுவதற்கான ஆதரவு - பாலினம் மற்றும் வயது ....32

நினைவு கூறுவதற்கான சுதந்திரம் ....33

வரைபு 50: நினைவு கூறுவதற்கான சுதந்திரம் தொடர்பான ஆதரவு - தேசிய ....33

வரைபு 51: நினைவு கூறுவதற்கான சுதந்திரம் தொடர்பான ஆதரவு - இனம் ....33

வரைபு 52: நினைவு கூறுவதற்கான சுதந்திரம் தொடர்பான ஆதரவு - பாலினம் மற்றும் வயது ....34

# அறிமுகம்

இந்த முதல்நிலை அறிக்கையானது 2024 ஜனவரியில் நடத்தப்பட்ட ஜனநாயகம் மற்றும் மீள்நல்லிணக்கம் தொடர்பிலான ஆய்வு முடிவுகளை முன்வைக்கின்றது. இந்த கருத்துக்கணிப்பானது இலங்கையில் ஜனநாயகம் மற்றும் மீள்நல்லிணக்கம் தொடர்பான சில முக்கிய விடயங்கள் மீதான மக்களின் உணர்வுகளை அறிய முற்படுகின்றது. இதன் மூலம் பரந்த ஜனநாயகம் மற்றும் மீள்நல்லிணக்கம் தொடர்பிலான விவாதத்தில், பொது மக்கள் தங்களின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் அவர்களின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் ஒரு தளத்தை வழங்குவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். அதோடு, சனத்தொகையின் மதிப்புகள், எதிர்பார்ப்புகள் மற்றும் விருப்பங்களுடன் தங்கள் முடிவுகளை சீரமைப்பதில் கொள்கை வகுப்பாளர்களுக்கு  உதவக்கூடிய ஒரு மதிப்புமிக்க கருவியாக இவ் ஆய்வு அமைகின்றது. இந்த அறிக்கையானது, இனங்களுக்கிடையிலான உறவுகள், சமூக மற்றும் அரசியல் சார்ந்த சிறுபான்மையினரின் பாதுகாப்பு, இனக்குழுக்களுக்கு இடையில் காணப்படும் நம்பிக்கை மற்றும் சகிப்புத்தன்மை, நிறுவனங்கள் மற்றும் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பன குறித்து ஆராய்கின்றது.

இந்தக் கணக்கெடுப்பு ஆய்வானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்கெடுப்பாய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் நடாத்தப்பட்டது. சோஷல் இன்டிகேட்டரானது, 1999ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பரந்த அளவிலான சமூக - அரசியல் பிரச்சினைகள் குறித்து அபிப்பிராய ஆய்வுகளை நடாத்தி வருகிறது. இந்த ஆய்வானது கலாநிதி பிரதீப் பீரிஸ், ரன்கனி ரனசிங்க, மா. கிருஷ்ணமூர்த்தி மற்றும் இஷாரா ஜயரத்ன ஆகியோரை உள்ளடக்கிய குழுவினால் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்வை நடாத்த ஆதரவளித்த கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் பவானி பொன்சேகாவுக்கும் மற்றும் இந்த கணக்கெடுப்பு ஆய்விற்கு நிதியளித்த நீதி உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான உலகளாவிய முன்முயற்சிக்கும் (GIJTR) சோஷல் இன்டிகேட்டரானது தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது

# முறைமையியல்

இந்த ஆய்வு பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி 25 மாவட்டங்களை சேர்ந்த சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய நான்கு இன சமூகங்களையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 1350 நபர்களுடன் நேருக்கு நேர் நேர்காணல்கள் மூலம் நடாத்தப்பட்டது. நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல்நிலை அடுக்கு எழுமாற்று மாதிரி நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரியின் இடம் தெரிவு செய்யப்பட்டது. 73 வெளிக்கள ஆய்வாளர்களைக் (ஆண் மற்றும் பெண்) கொண்டு 2024 ஜனவரி 4 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை வெளிக்களப்பணி மேற்கொள்ளப்பட்டது. தரவு சேகரிப்பு செயல்முறை நிறைவடைந்ததைத் தொடர்ந்து தரவுத்தொகுப்பானது சனத்தொகையின் மாவட்ட மற்றும் இன விகிதாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் நிறையேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பை (SPSS) பயன்படுத்தி தரவுத்தொகுப்பு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# முடிவுகளின் சாராம்சம்

## ஜனநாயகம் தொடர்பிலான ஆதரவு

- “வேறு எந்த வகையான அரசாங்கத்தையும் விட ஜனநாயகம் விரும்பத்தக்கது” என்ற கூற்றுடன் பெரும்பான்மையான இலங்கையர்கள் (76.7%) உடன்படுகின்றனர். இக்கருத்தானது அனைத்து பிரதான இனச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள், வயதுப் பிரிவினர் மற்றும் ஆண், பெண் இருபாலினரிடையேயும் பரந்து காணப்படுகின்றது.

## நிறுவனங்கள் மீதான நம்பிக்கை

- நாட்டின் நிர்வாகத்தில் பங்கு எடுக்கும் சில நிறுவனங்கள் அதாவது பாராளுமன்றம் (22.4%), அரசியல் கட்சிகள் (19.0%), தேசிய அரசாங்கம் (40.1%) மற்றும் மாகாண அரசாங்கம் (45.5%) மீதான நம்பிக்கையின் அளவு இலங்கையர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்து காணப்படுகின்றது. எவ்வாறாயினும், பெரும்பான்மையானவர்கள் நீதிமன்றங்கள் (79.2%), இராணுவம் (84.5%) மற்றும் பொலிஸ் (66.9%) ஆகிய நிறுவனங்கள் தொடர்பில் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளதுடன் அது கணிசமான அளவு உயர்வடைந்தும் காணப்படுகின்றது.

## மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம்

- பெரும்பான்மையான இலங்கையர்கள் (62.1%) போருக்குப் பின்னரான, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தற்போதைய அரசாங்கத்தின் முன்னேற்றத்தில் திருப்தி அடையவில்லை. இந்த அதிருப்தி நிலைமையானது அனைத்து பிரதான இனச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள், வயதுப் பிரிவினர் மற்றும் ஆண், பெண் இருபாலினரிடையேயும் பரந்து காணப்படுகின்றது.

## அதிகாரப் பரவலாக்கம்

- ஏறக்குறைய இலங்கையர்களில் அரைவாசியினர் (44.7%) ”மத்திய அரசின் அதிகாரங்களைக் குறைக்காமல் சில அதிகாரங்களை பரவலாக்குவது பரவாயில்லை என்ற கூற்றை ஏற்றுக்கொள்கின்றனர். மேலும் இலங்கையின் 35.6% இனர் ”மத்திய அரசின் அதிகாரத்தைக் குறைத்து மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.” என்ற கூற்றுடனும் உடன்படுகின்றனர். சிங்களம் (33.4%), மலையகத் தமிழ் (32.6%) மற்றும் முஸ்லிம் (34.5%) சமூகங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ் (53.1%) சமூகத்தினர் மத்தியில், மத்திய அரசின் அதிகாரத்தைக் குறைத்து மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். என்ற கருத்து சற்று மேலோங்கிக் காணப்படுகின்றது. மாறாக மத்திய அரசின் அதிகாரங்களைக் குறைக்காமல் சில அதிகாரங்களை பரவலாக்குவது பரவாயில்லை என்பது அரைவாசி அளவிலான சிங்கள சமூகத்தின் கருத்தாக அமைகின்றது.

## மதச்சார்பற்ற அரசியலமைப்பு

- ஏறக்குறைய அரைவாசி இலங்கையர்கள் (52%) இனர் ”ஒவ்வொரு பிரஜையினதும், சமத்துவமாக இருப்பதற்கான உரிமையை பேணுவதற்கு, எந்தவொரு மதத்திற்கும் அரசியலமைப்பில் முதன்மையான இடத்தை வழங்கக் கூடாது” என்ற கூற்றுடன் உடன்படுகின்றனர். அதோடு 42.2% இனர் ”நாட்டின் பெரும்பான்மையினரின் மதத்திற்கு அரசியலமைப்பில் முதன்மையான இடத்தை வழங்குவது பரவாயில்லை” என்ற கருத்தையும் ஏற்றுக்கொள்கின்றனர். “ஒவ்வொரு பிரஜையினதும்,

சமத்துவமாக இருப்பதற்கான உரிமையை பேணுவதற்கு, எந்தவொரு மதத்திற்கும் அரசியலமைப்பில் முதன்மையான இடத்தை வழங்கக் கூடாது'' என்கின்ற அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளவர்கள் சிங்கள சமூகத்துடன் ஒப்பிடும்போது சிறுபான்மை (தமிழ், மலையக தமிழ் மற்றும் முஸ்லிம்) சமூகத்தினர் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாக காணப்படுகின்றது. மாறாக நாட்டின் பெரும்பான்மையினரின் மதத்திற்கு அரசியலமைப்பில் முதன்மையான இடத்தை வழங்குவது பரவாயில்லை என்று கிட்டத்தட்ட அரைவாசி சிங்கள சமூகத்தினர் கருதுகின்றனர். இக் கருத்தை வெளிப்படுத்துபவர்கள் அநேகமாக பெரியவர்கள் (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) ஆவர்

## அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக அறிந்துவைத்துள்ளமை மற்றும் அபிப்பிராயங்கள்

- இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அரசியலமைப்புச் சீர்திருத்த செயல்முறைகள் குறித்து இலங்கையர்கள் மத்தியில் நடுத்தரமான விழிப்புணர்வு காணப்படுகின்றது. ஏறக்குறைய அரைவாசி இலங்கையர்கள் (42.9%) இது தொடர்பில் தெரிந்து வைத்திருப்பதாக கூறுவதன் மூலம் வெளிப்படுகின்றது, அவர்களில், அறிந்து வைத்திருப்பவர்களில் சிங்கள (40.4%) மற்றும் முஸ்லீம் (35.7%) சமூகங்களை விட தமிழ் (56.3%) மற்றும் மலையகத் தமிழ் (69.8%) சமூகங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவு விழிப்புணர்வு அதிகமாக காணப்படுகின்றது.

- "நாட்டின் இனப்பிரச்சினைக்கு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் குழுவினால் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வின் அடிப்படையில் அரசியல் அமைப்பானது மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கருத்திற்கு பெரும்பான்மையான இலங்கையர்கள் (72.3%) உடன்பாட்டை வெளிப்படுத்துகின்றனர். இக் கண்ணோட்டமானது, அனைத்து பிரதான இனச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள், வயதுப் பிரிவினர் மற்றும் ஆண், பெண் இருபாலினரிடையேயும் பரந்து காணப்படுகின்றது

- இலங்கையர்களில் அரைவாசியினர் (52.3%) தங்களுக்கு புதிய அரசியலமைப்பு தேவை என்று நம்புகின்ற அதே வேளை ஏறக்குறைய 40% இனர் தற்போதைய அரசியலமைப்பானது தேவையான சில மாற்றங்களுடன் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்று நம்புகின்றனர். இந்தக் கண்ணோட்டமானது சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களில் அரைவாசியினர் மத்தியில் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், மலையகத் தமிழ் சமூகத்தின் அரைவாசியினர் தற்போதைய அரசியலமைப்பில் சில மாற்றங்களுடன் தொடர வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

## சிறுபான்மை- பெரும்பான்மையினருக்கு இடையிலான உறவுகள்

- இந்த ஆய்வில் பதிலளிப்பவர்களிடம், ''எனது இனம் காரணமாக மக்கள் என்னை அடிக்கடி வேறுபடுத்தி நடத்துகின்றார்கள்'' என்ற கூற்றை எந்த அளவு ஏற்றுக்கொள்கின்றீர்கள் அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்று வினவப்பட்டது. இலங்கையர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் இக் கூற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த கூற்றை ஏற்றுக்கொள்ளாதவர்களின் அளவு தமிழ் (56.3%) மற்றும் மலையக தமிழ் (47.6%) சமூகத்துடன் பார்க்கும் போது சிங்கள (70.3%) மற்றும் முஸ்லீம் (78.6%) சமூகங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாக காணப்படுகின்றது.

- வேறு இனத்தைச் சேர்ந்த எவருடனாவது நீங்கள் எந்தளவு அடிக்கடி (இடைச்செயற்பாடு) தொடர்பு கொள்கிறீர்கள் என்று வினவிய போது, ஏறக்குறைய அரைவாசி இலங்கையர்கள் (48%) அவர்கள் மற்ற இனத்தைச் சேர்ந்தவர்களுடன் "அடிக்கடி" தொடர்பு கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். இந்தக் கருத்தானது மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரிடையே ஒப்பீட்டளவில் அதிகமாக காணப்படுகின்றது. ஏறக்குறைய 30% சிங்கள மற்றும் தமிழ் சமூகத்தினர் தாம் பிற இனத்தவர்களுடன் "அரிதாக" தொடர்பு கொள்வதாகக் தெரிவிக்கின்றனர். பிற இனத்தவர்களுடன் "அடிக்கடி" தொடர்புகொள்பவர்களாக தெரிவிப்பவர்களில் பெண்களுடன் ஒப்பிடும் போது ஆண்களே அதிகம்

- இலங்கையிலுள்ள மற்றைய இனத்தவர்கள் தொடர்பாக எவ்வளவு தூரம் அறிந்து வைத்துள்ளமை தொடர்பாக வினவிய போது, இலங்கையர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் (57%) தாங்கள் ஓரளவு அறிந்துவைத்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இக்கருத்தானது அனைத்து பிரதான இனச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள், வயதுப் பிரிவினர் மற்றும் ஆண், பெண் இருபாலினரிடையேயும் பரந்து காணப்படுகின்றது.

- ஆய்வில் பங்குபற்றிய பதிலளிப்பவர்களிடம் அவர்கள் வாழும் சமூகத்தில் தங்கள் சொந்த மதத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் தொடர்பாக வினவப்பட்டது. பெரும்பான்மையான இலங்கையர்கள் (95.6%) அவர்கள் தங்கள் மதத்தை எந்தக் கட்டுப்பாடுகளுமின்றி பின்பற்றலாம் என்று பதிலளித்தனர். இக்கருத்தானது அனைத்து பிரதான இனச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள், வயதுப் பிரிவினர் மற்றும் ஆண், பெண் இருபாலினரிடையேயும் பரந்து காணப்படுகின்றது. இருந்தபோதிலும், இலங்கையர்களில் 3.7% இனர் தமது மதத்தை கடைபிடிக்க முடியும், ஆனால் சில கட்டுப்பாடுகள் உண்டு என்று தெரிவித்திருந்தனர்

## சமூக நம்பிக்கை

- பதிலளிப்பவர்களிடம், தங்களுக்கு தனிப்பட்ட உதவி பெற வேண்டி ஏற்படின் தமது அயலவர்கள், உறவினர்கள் மற்றும் வெவ்வேறு இனத்தவர்களை எந்த அளவிற்கு நம்புவீர்கள் என்று வினவப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் உதவி பெற வேண்டி இருப்பின் தங்கள் அயலவர்கள் (86%) அல்லது உறவினர்களை (91.2%) நம்புவதாக பெரும்பான்மையானவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், உதவி பெற வேண்டி ஏற்படின் சிங்கள (85.4%), தமிழ் (69.3%) மற்றும் முஸ்லீம் (64.1%) சமூகத்தவர்களை நம்புவதாக குறிப்பிடத்தக்க சதவீதமான இலங்கையர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும், தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகங்களுடன் ஒப்பிடும் போது, சிங்கள சமூகத்திடம் உதவி பெற விரும்புவோர் அதிகம். பிரதான இன சமூகங்களைப் பார்க்கும்போது, ஒவ்வொரு இனக்குழுவிலும் பெரும்பான்மையானவர்கள் தங்கள் சொந்த இனத்திடம் இருந்து உதவி பெறவே விரும்புகிறார்கள்.

## சிறுபான்மையினருக்கான அரசியல் பாதுகாப்பு

- "ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளாத போதும், சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்" என்ற கூற்றை அதி பெரும்பான்மையான இலங்கையர்கள் (90.9%) ஏற்றுக்கொள்கின்றனர். இந்தக் கருத்தானது, அனைத்துப் பிரதான இனச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இடையேயும் அனைத்து வயதுப் பிரிவினர் மற்றும் ஆண், பெண் இருபாலினரிடையேயும் பரந்து காணப்படுகின்றது.

- பெரும்பான்மையான இலங்கையர்கள் (79.5%) "ஒவ்வொரு இனக் குழுவுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான உரிமை இருக்க வேண்டும்" என்ற கூற்றை ஏற்றுக்கொள்கின்றனர். இக்கருத்தானது அனைத்து இன சமூகங்களிலும்

காணப்படுகின்ற போதிலும், ஏனைய இன சமூகங்களுடன் ஒப்பிடும் போது சிங்கள சமூகத்தினரிடையே குறைவாகவே காணப்படுகின்றது.

- அரசியலமைப்பில் மதம் வகிக்கும் பங்கு தொடர்பாக வினவிய போது, இலங்கையர்கள் வேறுபட்ட கருத்துக்களை தெரிவிக்கின்றனர். இலங்கையின் அரசியலமைப்பில் மதச் சுதந்திரத்தை அடிப்படை உரிமையாகப் பாதுகாக்க வேண்டும் என்று 30% இலங்கையர்கள் தெரிவிப்பதோடு, மேலும் இலங்கையர்களில் 30% இனர், இலங்கையின் அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படுகின்ற அதே வேளை மற்ற அனைத்து மதத்தினவர்களினதும் மதச் சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர். மேலும், ஏறக்குறைய 20% இனர், இலங்கையின் அரசியலமைப்பில் அனைவரினதும் மதச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டுமே தவிர மதம் பற்றிய வேறு குறிப்பிடுதல்களையும் கொண்டிருத்தல் கூடாது என்று தெரிவிக்கின்றனர்.

- இக் கருத்தானது சிறுபான்மை இன சமூகங்களில் (தமிழர்கள், மலையக தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள்) கணிசமாக அளவு உயர்ந்துள்ளது. மாறாக சிங்கள சமூகத்தவர்கள் இது தொடர்பில் வேறுபட்ட கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

## தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி

- “தேசிய கீதம் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் பாடப்படல் வேண்டும்” என்ற கூற்றுடன் அவர்களது உடன்பாட்டின் நிலை குறித்து பதிலளிப்பவர்களிடம் கேட்கப்பட்டது, இலங்கையர்களில் 60% இனர் இக் கூற்றை ஏற்றுக்கொள்கின்றதாக தெரிவிக்கின்ற அதே வேளை 30% இற்கும் அதிகமானவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். இரு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்படல் வேண்டும் என்று நினைப்பவர்களில் சிறுபான்மை சமூகத்தவர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவில் உயர்வாக காணப்படுகின்றது. மாறாக இந்த விடயம் தொடர்பில் சிங்களச் சமூகத்தவரின் கருத்தானது வேறுபட்டு காணப்படுகின்றது. வயது அடிப்படையில் ஒப்பிடும் போது இக் கூற்றை இளைஞர் யுவதிகளே (18-29 வயது) அதிகளவில் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

## நினைவு கூறுவதற்கான சுதந்திரம்


- “30 வருட கால யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூறுவதற்கு அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டே அனைத்து இன மக்களுக்கும் நினைவு கூறுவதற்கான சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும்” என்ற கூற்றுடன் ஏறக்குறைய அரைவாசி இலங்கையர்கள் (47.8%) உடன்படுவதாக தெரிவிக்கின்றனர், இலங்கையர்களில் மற்றைய அரைவாசியினர் (47.2%) “30 வருட கால யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூறுவதற்கு அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும்” என்ற கூற்றுடன் உடன்படுகின்றதாகத் தெரிவிக்கின்றனர்

- “30 வருட கால யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூறுவதற்கு அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும்” என்ற கூற்றை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிப்பவர்களின் அளவு ஒப்பீட்டளவில் தமிழ் (76.8%) மற்றும் மலையக தமிழ் (67.4%) சமூகத்தவர்கள் மத்தியில் அதிகம். மற்றும் இளைஞர் யுவதிகள் மத்தியிலும் (18-29 வயது) அதிகம். மாறாக சிங்கள மக்களின் அபிப்பிராயமானது இந்த இரண்டு கூற்றுக்கள் மத்தியில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.


# ஆய்வு முடிவுகள்

# ஜனநாயகம் தொடர்பிலான ஆதரவு


## வரைபு 01: ஜனநாயகத்திற்கான ஆதரவு – தேசிய




## வரைபு 02: ஜனநாயகத்திற்கான ஆதரவு - இனம்




வரைபு 03: ஜனநாயகத்திற்கான ஆதரவு - பாலினம் மற்றும் வயது




## நிறுவனங்கள் மீதான நம்பிக்கை

வரைபு 04: நிறுவனங்கள் மீதான நம்பிக்கை - தேசிய




அட்டவணை 01: நிறுவனங்கள் மீதான நம்பிக்கை - இனம்


| | சிங்களம் | தமிழ் | மலையகத்தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|---|---|
| தேசிய அரசாங்கம் | 35.2% | 57.1% | 67.4% | 51.2% |
| எனது மாகாண அரசாங்கம் | 40.9% | 63.4% | 67.4% | 54.8% |
| எனது உள்ளூராட்சி அரசாங்கம் (மாநகர, நகர, பிரதேச) | 50.0% | 71.4% | 69.0% | 69.9% |
| அரச சேவை | 71.6% | 84.8% | 76.7% | 70.2% |
| பொலிஸ் | 66.5% | 72.3% | 71.4% | 60.7% |
| இராணுவம் | 90.9% | 62.5% | 69.8% | 61.4% |
| நீதிமன்றங்கள் | 78.2% | 87.6% | 90.5% | 72.6% |
| பாராளுமன்றம் | 13.8% | 56.3% | 58.1% | 41.0% |
| அரசியல் கட்சிகள் | 13.1% | 42.9% | 42.9% | 31.3% |
| தேர்தல் ஆணையகம் | 46.0% | 64.3% | 76.2% | 45.8% |
| அரச சார்பற்ற நிறுவனங்கள் | 44.6% | 69.6% | 78.6% | 57.1% |

# மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம்


வரைபு 05: மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம் குறித்த திருப்தி - தேசிய



வரைபு 06: மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம் குறித்த திருப்தி - இனம்





வரைபு 07: மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பிலான முன்னேற்றம் குறித்த திருப்தி - பாலினம் மற்றும் வயது




# அதிகாரப் பரவலாக்கம்


வரைபு 08: மாகாண சபைக்கு அதிகாரம் பகிர்ந்தளிப்பது தொடர்பான ஆதரவு - தேசிய




வரைபு 09: மாகாண சபைக்கு அதிகாரம் பகிர்ந்தளிப்பது தொடர்பான ஆதரவு - இனம்




வரைபு 10: மாகாண சபைக்கு அதிகாரம் பகிர்ந்தளிப்பது தொடர்பான ஆதரவு - பாலினம் மற்றும் வயது





# மதச்சார்பற்ற அரசியலமைப்பு


வரைபு 11: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழஙகப்படுகின்ற இடம் தொடர்பிலான ஆதரவு - தேசிய



### வரைபு 12: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் தொடர்பிலான ஆதரவு - இனம்





### வரைபு 13: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் தொடர்பிலான ஆதரவு - பாலினம் மற்றும் வயது




# அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை மற்றும் அபிப்பிராயங்கள்


வரைபு 14: அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - தேசிய





வரைபு 15: அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - இனம்




### வரைபு 16: அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - பாலினம் மற்றும் வயது




### வரைபு 17: அரசியல் தீர்வு தொடர்பான அபிப்பிராயம் - தேசிய




வரைபு 18: அரசியல் தீர்வு தொடர்பான அபிப்பிராயம் - இனம்





- விளங்கவில்லை - எந்தக் கருத்தும் இல்லை
- எல். ரீ. ரீ. ஈ யினர் இராணுவ ரீதியில் முழுமையாக தோற்கடிக்கப்பட்டதால் அரசியல் தீர்விற்கான அவசியம் இல்லை
- இரண்டும் இல்லை
- நாட்டின் இனப்பிரச்சினைக்கு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் குழுவினால் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வின் அடிப்படையில் அரசியல் அமைப்பானது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வரைபு 19: அரசியல் தீர்வு தொடர்பான அபிப்பிராயம் - பாலினம் மற்றும் வயது





- விளங்கவில்லை - எந்தக் கருத்தும் இல்லை
- எல். ரீ. ரீ. ஈ யினர் இராணுவ ரீதியில் முழுமையாக தோற்கடிக்கப்பட்டதால் அரசியல் தீர்விற்கான அவசியம் இல்லை
- இரண்டும் இல்லை
- நாட்டின் இனப்பிரச்சினைக்கு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் குழுவினால் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வின் அடிப்படையில் அரசியல் அமைப்பானது மாற்றியமைக்கப்பட வேண்டும்.


வரைபு 20: அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான ஆதரவு – தேசிய




வரைபு 21: அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான ஆதரவு - இனம்




### வரைபு 22: அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான ஆதரவு - பாலினம் மற்றும் வயது





## சிறுபான்மை - பெரும்பான்மையினருக்கு இடையிலான உறவுகள


### வரைபு 23: "எனது இனம் காரணமாக மக்கள் என்னை அடிக்கடி வேறுபடுத்தி நடத்துகின்றார்கள்" – தேசிய




வரைபு 24: "எனது இனம் காரணமாக மக்கள் என்னை அடிக்கடி வேறுபடுத்தி நடத்துகின்றார்கள்" - இனம்





வரைபு 25: "எனது இனம் காரணமாக மக்கள் என்னை அடிக்கடி வேறுபடுத்தி நடத்துகின்றார்கள்" – பாலினம் மற்றும் வயது




வரைபு 26: உங்கள் இனம் தவிர்ந்த வேறு இனத்தைச் சேர்ந்த எவருடனாவது நீங்கள் எந்தளவு அடிக்கடி (இடைச்செயற்பாடு) தொடர்பு கொள்கிறீர்கள்? – தேசிய





வரைபு 27: உங்கள் இனம் தவிர்ந்த வேறு இனத்தைச் சேர்ந்த எவருடனாவது நீங்கள் எந்தளவு அடிக்கடி (இடைச்செயற்பாடு) தொடர்பு கொள்கிறீர்கள்? - இனம்




## வரைபு 28: உங்கள் இனம் தவிர்ந்த வேறு இனத்தைச் சேர்ந்த எவருடனாவது நீங்கள் எந்தளவு அடிக்கடி (இடைச்செயற்பாடு) தொடர்பு கொள்கிறீர்களா? - பாலினம் மற்றும் வயது





## வரைபு 29: இலங்கையிலுள்ள மற்றைய இனத்தவர்கள் தொடர்பாக நீங்கள் எவ்வளவு தூரம் தெரிந்து / அறிந்து வைத்துள்ளீர்கள்? - தேசிய




வரைபு 30: இலங்கையிலுள்ள மற்றைய இனத்தவர்கள் தொடர்பாக நீங்கள் எவ்வளவு தூரம் தெரிந்து / அறிந்து வைத்துள்ளீர்கள்? - இனம்





வரைபு 31: இலங்கையிலுள்ள மற்றைய இனத்தவர்கள் தொடர்பாக நீங்கள் எவ்வளவு தூரம் தெரிந்து / அறிந்து வைத்துள்ளீர்கள்? - பாலினம் மற்றும் வயது




வரைபு 32: உங்களது சமூகத்தில் உங்களது சமயத்தினை கடைபிடிப்பதற்கு எந்தளவு சுதந்திரம் காணப்படுகின்றது என நீங்கள் நினைக்கிறீர்கள்? – தேசிய





வரைபு 33: உங்களது சமூகத்தில் உங்களது சமயத்தினை கடைபிடிப்பதற்கு எந்தளவு சுதந்திரம் காணப்படுகின்றது என நீங்கள் நினைக்கிறீர்கள்? - இனம்



வரைபு 34: உங்களது சமூகத்தில் உங்களது சமயத்தினை கடைபிடிப்பதற்கு எந்தளவு சுதந்திரம் காணப்படுகின்றது என நீங்கள் நினைக்கிறீர்கள்? - பாலினம் மற்றும் வயது





வரைபு 35: உங்களது சமூகத்தில் உங்களது சமயத்தினை கடைபிடிப்பதற்கு எந்தளவு சுதந்திரம் காணப்படுகின்றது என நீங்கள் நினைக்கிறீர்கள்? – மதம்




## சமூக நம்பிக்கை

வரைபு 36: உங்களுக்கு ஏதேனும் தனிப்பட்ட உதவி பெற வேண்டி இருப்பின், உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் நபர்களை நீங்கள் எந்த அளவிற்கு நம்புவீர்கள் என்று கூறமுடியுமா? - தேசிய





வரைபு 37: உங்களுக்கு ஏதேனும் தனிப்பட்ட உதவி பெற வேண்டி இருப்பின், உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் நபர்களை நீங்கள் எந்த அளவிற்கு நம்புவீர்கள் என்று கூறமுடியுமா? - இனம்




## சிறுபான்மையினருக்கான அரசியல் பாதுகாப்பு


வரைபு 38: ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளாத போதும், சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் - தேசிய





வரைபு 39: ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளாத போதும், சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் - இனம்




வரைபு 40: ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளாத போதும், சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் – பாலினம் மற்றும் வயது





வரைபு 41: ஒவ்வொரு இனக் குழுவுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான உரிமை இருக்க வேண்டும். – தேசிய




வரைபு 42: ஒவ்வொரு இனக் குழுவுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான உரிமை இருக்க வேண்டும். - இனம்





வரைபு 43: ஒவ்வொரு இனக் குழுவுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான உரிமை இருக்க வேண்டும். – பாலினம் மற்றும் வயது




## வரைபு 44: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் - தேசிய




## வரைபு 45: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் - இனம்




வரைபு 46: அரசியலமைப்பினுள் மதத்திற்கு வழங்கப்படுகின்ற இடம் - பாலினம் மற்றும் வயது 30 தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி





## தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி


வரைபு 47: தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மற்றும் தமிழ் மொழியில் பாடுவதற்கான ஆதரவு - தேசிய



வரைபு 48: தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மற்றும் தமிழ் மொழியில் பாடுவதற்கான ஆதரவு - இனம்





வரைபு 49: தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மற்றும் தமிழ் மொழியில் பாடுவதற்கான ஆதரவு - பாலினம் மற்றும் வயது




# நினைவு கூறுவதற்கான சுதந்திரம்

## வரைபு 50: நினைவு கூறுவதற்கான சுதந்திரம் தொடர்பான ஆதரவு – தேசிய





- 30 வருட கால யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூறுவதற்கு அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும்
- இரண்டும் இல்லை
- 30 வருட கால யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூறுவதற்கு அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டே அனைத்து இன மக்களுக்கும் நினைவு கூறுவதற்கான சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும்
- விளங்கவில்லை - எந்தக் கருத்தும் இல்லை

## வரைபு 51: நினைவு கூறுவதற்கான சுதந்திரம் தொடர்பான ஆதரவு - இனம்




- 30 வருட கால யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூறுவதற்கு அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும்
- இரண்டும் இல்லை
- 30 வருட கால யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூறுவதற்கு அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டே அனைத்து இன மக்களுக்கும் நினைவு கூறுவதற்கான சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும்
- விளங்கவில்லை/ எந்தக் கருத்தும் இல்லை

## வரைபு 52: நினைவு கூறுவதற்கான சுதந்திரம் தொடர்பான ஆதரவு - பாலினம் மற்றும் வயது



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது ஒரு சுயாதீனமான, கட்சி சார்பற்ற அமைப்பாகும், இது முதன்மையாக ஆளுகை மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. பொதுக் கொள்கை விவாதத்தில் சிவில் சமூகத்தின் முக்கிய பங்களிப்பை வலுப்படுத்த வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 இல் உருவாக்கப்பட்டது, பொதுக் கொள்கை விமர்சிக்கப்படும்,மாற்று வழிகள் அடையாளம் காணப்பட்டு பரப்பப்படும் ஆராய்ச்சி மற்றும் வாதிடும் திட்டங்களுக்கு உறுதிபூண்டுள்ளது

முகவரி: 6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05.

தொலைபேசி இலக்கம் : +94(11)2081384-6

இணையதளம்: http://www.cpalanka.org

சோஷல் இன்டிகேட்டர் என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) ஆய்வுப் பிரிவாகும். இது 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறுவப்பட்டது. இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளில் நிரந்தர, தொழில்முறை மற்றும் சுயாதீனமான வாக்களிப்பு வசதிக்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்புகிறது. கருத்துக்கணிப்பு ஆய்வு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையால் உந்தப்பட்டு, SI அதன் தொடக்கத்தில் இருந்தே பல சமூக- பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளில் கருத்துக் கணிப்புக்களை நடத்தி வருகிறது

முகவரி : 6/1B, 1/1, லெயார்ட்ஸ் வீதி,கொழும்பு 5.

தொலைபேசி இலக்கம்: +94 112 584 050

இணையதளம்: http://cpalanka.org/survey-research/